# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1725/30 - 2011 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා - 2011.09.30

1725/30 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 36

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் வர்ணப்பூச்சுக்களானவை அவற்றின் எதிரே நிரல்படுத்தப்பட்டுள்ள இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ள அதிக பட்ச காரீயத்தின் நியம அளவிலும் (செறிவு) குறைவானதாக இருக்க வேண்டுமென கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்படி எந்தவொரு வர்ணப்பூச்சுக்கள் தயாரிப்பாளர், இறக்குமதியாளர், பொதிசெய்வோர், விநியோகஸ்தர் மற்றும் விற்பனை செய்வோர், இந்த நியம அளவைக் கடைப்பிடித்து வர்ணப்பூச்சுகளைத் தயாரித்தல், இறக்குமதிசெய்தல், பொதிசெய்தல், பயன்படுத்தல், விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது விற்பனைக்காக வைத்தல் அல்லது மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனைக்கு உட்படுத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

| | அதிகபட்ச காரீய நியம அளவு (செறிவு) |
|---|---|
| சிறுவர்களுக்கான பொம்மைகள் மற்றும் உபகரணங்களுக்கான வர்ணப்பபூச்சுகள் (HCL அசிட்டில் கரையக்கூடியது) | 90 மி.கி./கிலோகிராம் |
| எனாமல் வர்ணப்பூச்சுகள் | 600 மி. கி./கிலோகிராம் |
| எமல்சன் வர்ணப்பூச்சுகள் வெளிப் பாவனைக்கானவை | 90 மி. கி./கிலோகிராம் |
| எமல்சன் வர்ணப்பூச்சுகள் உள்ளகப் பாவனைக்கானவை | 90 மி. கி./கிலோகிராம் |
| நிலத் தளத்திற்குரிய வர்ணப்பூச்சுகள் | 600 மி. கி./கிலோகிராம் |

இப் பணிப்புரை 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2011, செத்தெம்பர் 28.

10-379

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.